Vaipparu River Scheme

* 531 *Q*.—Sri N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் ஜில்லா சாத்தூர் அருகே உள்ள வைப்பாற்றிலிருந்து சமுத்திரத்தில் ஆண்டுதோறும் வீணுகப்பாயும் தண்ணீரைப் பயன்படுத்த திட்டம் ஏதேனும் உள்ளதா ?

The Hon. Sri P. KAKKAN : Yes sir. The feasibility of forming a small reservoir across Vaippar to catch flash floods is being examined.

Sri N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, சென்ற அக்டோபர் மாதத்தில் நான் 15 தினங்கள் அங்கே தங்கியிருந்தேன். அப்போது ஆறு நிறையத் தண்ணீர் சென்றுகொண்டிருந்ததைப் பார்த்தேன். ஜனவரி மாதமும் நிறையத் தண்ணீர் போய்க் கொண்டிருந்தது. இவ்வளவு தண்ணீர் வீணுகப் போகிறதே என்று அங்குள்ள மக்கள் சொல்லி வருத்தப்பட்டார்கள். இதை விரைவாகப் பரிசீலனை செய்து ஒரு தகுந்த திட்டம் தயாரிக்க முடியுமா ?

The Hon. Sri P. KAKKAN : பரிசீலனை செய்து அரசாங்கம் தக்க முயற்சி செய்து வருகிறது. இரண்டு விதத் திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அதாவது நேரிடையாகத் தண்ணீர் கொடுக்க முடியுமா அல்லது கண்மாய் மூலமாகக் கொடுக்கலாமா என்பது அந்த இரண்டு திட்டங்கள். அப்படிப் பார்த்ததிலே 1943–44, 1948–49, 1951–52-ல் இருந்த நிலைமையிலிருந்து நேரிடையாகக் கொடுப்பதென்பது நல்ல திட்டமல்ல—லாபகரமான திட்டமல்ல—என்று விட்டு விட்டார்கள். கண்மாய் மூலமாகக் கொடுப்பதில் கூட மொத்தம் 150 ஏக்கர்களுக்குத் தான் கொடுக்க முடியும் என்று அதையும் விட்டு விட்டார்கள். இருந்தாலும் எங்கு அதிகப்படி ஜலம் வருகிறதோ அங்கு அதைப் பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Temple Lands

* 532 *Q*.—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–ம் நவம்பர் மாதம் 22-ந்தேதியில் நடைபெற்ற சென்னை மாகாண ஹரிஜன இலாகா (Madras State Harijan Welfare Committee Meeting) கூட்டத்தில் ஹிந்து மத அறநிலைப் பரிபாலன போர்டின் ஆதிக்கத்துக்குட்பட்ட தேவஸ்தான நிலங்களையும் கோவில் நிலங்களையும் விவசாயம் செய்யப்படுவதற்காக ஏலத்தில் விடுவதை நிறுத்தி ஹரிஜனங்களுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(ஆ) In view of the provisions of the Madras Cultivating Tenants' Protection Act, 1955. the existing tenants of temple lands cannot be evicted unless otherwise provided for therein. No action was, therefore, taken by the Government.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், தென்காசியில் குத்தகைக்கு சொந்த நிலத்தை ஏழை விவசாயிகள் உழுது கொண்டிருந்ததை வசதி படைத்த ஓர் சிலரிடத்திலே விவசாயப் பண்ணை என்ற பெயரால் கொடுக்க முயற்சி செய்து வருவதும், அதை எதிர்த்து அங்குள்ள விவசாயிகள் போராடி வருவதும் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?